**தலைப்பு – 112 வெளிநாட்டலுவல்கள் அமைச்சு**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இணைக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய கூற்றுக்கள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 திசெம்பர் 23 ஆம் திகதி அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், காண்புகள், கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளின் போதியளவு செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும், நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப்பெற்ற பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமானளவு விரிவானதொரு கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 ஆம் 152 ஆம் ஏற்பாடுகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்கும் வகையில் பேணப்படுதல், தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பித்தல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது பிழைகளின் நிமித்தம் ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்களைத் கொண்டிராத கணக்குகளையும் இணக்கக்கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் அவற்றை நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டைத்

திட்டமிடல் அமுலாக்குதல் மற்றும் பேணுதல் இப் பொறுப்புக்களில் உள்ளடக்கபொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பிரயோகித்தல், சந்தர்ப்பத்துக்கேற்றவாறு நியாயபூர்வமாக கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரித்தல் என்பனவும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.2 கணக்காய்வு அவதானிப்புகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, இதன் (அ) முதல் (உ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகளைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

அமைச்சால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புகள் |
|---|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை |
| சேதங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | பேணப்பட்டிருக்கவில்லை |

## (ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு

### (i) மொத்த ஏற்பாடும் செலவும்

மீளாய்வாண்டிற்காக அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 8,534,620,050 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இதில் ரூபா 8,300,821,166 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய சேமிப்பு ரூபா 233,798,884 ஆக இருந்ததுடன் இது மொத்த தேறிய ஏற்பாட்டில் 03 சதவீதமாகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவின வகை | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதிப்பீட்டு ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்புக்கள் | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டெழுபவை | 5,700,400,000 | 7,330,094,950 | 24,694,828 | 0.34 |
| மூலதனம் | 939,700,000 | 1,204,525,100 | 209,104,056 | 17.36 |
| கூட்டுத்தொகை | 6,640,100,000 | 8,534,620,050 | 233,798,884 | 2.74 |

### (ii) பாதீட்டு முரண்கள்

மூலதன செலவின விடயங்களுக்காக ரூபா 17 மில்லியன் தொகையான குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாட்டின் கீழ் ஏற்பாடுகள் பெறப்பட்டு எதிர்பார்க்கப்பட்டவாறு பயன்படுத்தப்பட்டிராமையால் அவ் ஏற்பாட்டின் ரூபா 6 மில்லியன் தொகை எஞ்சியிருந்தது. மேலும் இரு மூலதன செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளில் ரூபா 28 மில்லியன் தொகையும் ரூபா 139 மில்லியன் தொகையுமான சேமிப்புகள் காணப்பட்டன.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

11201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தில் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் பின்வருமாறாகும்.

| செலவுகள் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 21,000,000 | 17,878,927 | 18,000,000 | 24,715,933 | 110,000,000 | 94,760,576 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 11201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2012 திசெம்பர் 31 வரையான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் தினத்தில் அறவீடுகள் நிலுவையாக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,075,677 ஆனதுடன் 2014 பெப்ரவரி 12 ஆம் திகதிவரை இதில் ரூபா 1,621,277 தொகை அறவிடப்பட்டிருந்தது.

(ii) தனியான மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் முழுக் கூட்டுத்தொகைக்கும் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிக்கும் இடையில் ரூபா 99,202 தொகையான வேறுபாடு நிதிப் பிரமாணம் 427 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் போது 05 சந்தர்ப்பங்களில் இடர் கடனுக்காக ரூபா 436,551 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு கடன் பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து கடன் தவணைப்பணத்தை அறவிடுகையில் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3:5 ஆம் பிரிவிற்கு முரணாக உரிய உத்தியோகத்தர்களின் சம்பளத்தில் 40

சதவீத அளவினை விஞ்சும் வகையில் உரிய கடன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iv) 2011 திசெம்பர் 30 ஆம் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரமும் 2008 திசெம்பர் 31 ஆம் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் படி இடர் கடன் செலத்தப்படுகையில் ஆகக் கூடிய கடன் உரித்து ரூபா 250,000 ஆக இருக்க வேண்டிய போதிலும் மேற்குறித்த சுற்றறிக்கைக்கு முரணாக 2012 ஆம் ஆண்டில் 08 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,175,120 தொகையான இடர் கடன் அதிகரித்துச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சின் 2012 திசெம்பர் 31 வரையிலும் கட்டுநிதிக் கணக்கில் ரூபா 1,587,129,924 தொகையான வரவு மீதியும் ரூபா 457,464,517 தொகையான செலவு மீதியும் காணப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 ஏப்ரல் 30 வரையிலும் அமைச்சு தீர்த்திராத கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 663,474,619 தொகையாகக் காணப்பட்டது.

(ii) அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதிக் கணக்கு மீதி, அத் திகதியில் தீர்க்கப்படாத முற்பண மீதி மற்றும் வெளிநாட்டு தூதரகங்களின் பண மீதி உள்ளடங்கலாக ரூபா 103,322,295 தொகையான மீதி இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) அமைச்சுக்கள் மற்றும் தூதுரகங்களின் கூட்டுத்தொகை ரூபா 472,238,076 தொகையான முற்பணம் 1 – 34 ஆண்டுகள் வரையான காலப்பகுதியின் போது தீர்க்கப்படாதிருந்தது. இம் மீதிகளில் தற்போது குடியிருக்கும் வீட்டிற்காக வைப்புச் செய்யப்பட்ட முற்பண மீதியும் உள்ளடங்குவதுடன் அறவிடப்படாத மீதியை அறவிடும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(iv) தாபன விதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 27.8 ஆம் பிரிவிற்கு முரணாக ஒரே உத்தியோகத்தருக்கு பல சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 9,527,236 தொகையானதுடன் நீண்டகாலமகத் தீர்க்கப்படாத முற்பண மீதி தொடர்பாக அவ் அத்தியாயத்தின் 27.7 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) நிதிப் பிரமாணம் 212(2)(V) இன் பிரகாரம் சம்பள முற்பணமாக 2007 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட ரூபா 323,179 கூட்டுத்தொகை சம்பளப் பட்டியலில் இருந்து கழிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) தூதரகத்தின் மூலம் 2007 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை ரூபா 17,101,592 தொகையான வங்கிப் பிணை வழங்கப்பட்டிருந்ததுடன் இதில் 3 ஆண்டுகளுக்கு மேல் பழைமைவாய்ந்த ரூபா 7,689,687 தொகையான மீதிகள் அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) பொது வைப்புக் கணக்குகள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 926,572,601 ஆனதுடன் இது தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| கணக்கு இல. | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா |
| 6000/0000/00/0006/0071/000 | 35,857,444 |
| 6000/0000/00/0011/0559/000 | 16,845,552 |
| 6000/0000/00/0015/0025/000 | 873,869,605 |
| மொத்தம் | 926,572,601 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 25,537,532 தொகையான 46 வைப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு உரித்தான 6000/0000/00/0006/0071/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 35,857,443 தொகையான மீதி காணப்பட்டதுடன் அக் கணக்கு 2011 ஆம் ஆண்டின் பின்னர் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(iii) ஜோர்தான் நாட்டிற்கு வேலை வாய்ப்பிற்காகச் சென்று பல்வேறு காரணங்களுக்காக மீள இலங்கைக்கு மீள வருவித்தமைக்காக இலங்கையில் உள்ள அவர்களது உறவினர்களால் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் வைப்புச் செய்யப்பட்ட தொகையில் விமானப் பயணச் சீட்டிற்காக செலவிடப்பட்டதை அடுத்து ரூபா 537,277 தொகை எஞ்சியிருந்தது. அவ் எஞ்சிய தொகை உரிய உரித்தாளர்களுக்கு 2012 திசெம்பர் 31 வரையிலும் கொடுத்துத் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுச் செயலாளர்கள், மாகாண சபை பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைத் தலைவர்களுக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு முதல் எதிர்வரும் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் அமைச்சினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டம் 2012 திசெம்பர் 31 வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

மேற்குறித்த 1.4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிற்கும் இதனை அடுத்தும் அமைச்சினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.3 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 ஏப்ரல் 27 ஆம் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.5 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கியிராத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணம் | | |
| நி.பி. 102 | 916,650 | இழப்புகளுக்கும் சேதங்களுக்கும் உட்படாத தீர்க்கப்படாத முற்பணமாகக் காண்பிக்கப்பட்ட 07 சந்தர்ப்பங்களின் போது அறவிடப்படாத வீட்டுப் பாதுகாப்புப் பிணை வைப்புகளும் இழப்புக்கள் |

| | | |
|---|---|---|
| | | சேதங்களாக ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தன. |
| நி.பி. 106 | 16,190,207 | பற்றாக்குறைகள், முறையற்ற பயன்பாடுகள் அல்லது வேறு காரணத்தால் பணம் இல்லாது போகையில் இதற்குப் பொறுப்பளிக்கப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து பிணை அறவிடப்பட்டிராத சந்தர்ப்பங்களின் போது திறைசேரியிலிருந்து முற்பணம் ஒன்று பெறப்பட்டு அவ்விழப்பு ஈடுசெய்யப்பட வேண்டிய போதிலும் 2008 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டதாக 5 சந்தர்ப்பங்களின் போது குறிப்பிடப்பட்டிருந்த இத் தொகை ஒதுக்கீட்டுக் கணக்கில் நட்டங்கள் மற்றும் சேதங்களாகத் தொடர்ந்து முன்கொண்டு வரப்பட்டிருந்தன. |

**1.6 செயற்திட்ட அமுலாக்கலிலான நலிவுகள்**

2000 செப்தெம்பர் 27 ஆம் திகதிய 00/1848/23/19 ஆம் இலக்க அமைச்சரவைத் குறிப்பின் மூலம் அமைச்சிற்கு 20 வீடுகள் கொள்வனவு செய்யப்படுவதற்காக செயற்திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. நீண்ட காலதாமதத்தை அடுத்து அதாவது 2006 நவம்பர் 01 ஆம் திகதி வரையிலும் 20 வீடுகளில் 16 வீடுகள் பொறுப்பேற்கப்பட்டிருந்ததுடன் இதற்காக உடன்படிக்கைத் தொகையிலும் பார்க்க ரூபா 5,065,000 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. மிகுதியான 04 வீடுகளை நிர்மாணிப்பதற்காக அடிப்படைத் திட்டம், மதிப்பீடு மற்றும் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது சகல கட்டணங்களும் உள்ளடங்கலாக ரூபா 30,550,820 இற்கு உடன்பட்டிருந்தது. இவ் 20 வீடுகளையும் கொள்வனவு செய்வதற்காக 2000 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான நீண்ட காலதாமதம் ஏற்பட்டமையால் ஒதுக்கப்பட்ட தொகையிலும் பார்க்க ரூபா பதினைந்து மில்லியன் கூடுதலாகச் செலுத்தப்பட நேர்ந்தது. வீடுகளின் உரித்தை

உறுதிப்படுத்துவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகள் இல்லாதிருந்ததுடன் உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்படாது இவ் வீடு பயன்படுத்தப்படுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

## 1.7 வங்கிக் கணக்கு செயற்பாட்டு குறைபாடுகள்

### (அ) சீராக்கப்பட வேண்டிய மீதி

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 06 மாதங்கள் கடந்த காசோலைகளின் 1,640 கனடா டொலர்களும் 1,400 டுபாய் டிராம்களும் 6,069 பிரசீல் ரீல் காசோலைகள் 2013 திசெம்பர் 03 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) கன்பரா தூதரகம்

(i) ஒதுக்கீட்டுக் கணக்கின் குறிப்பு (IV) ஆம் வங்கிக் கணக்குகளின் இணக்கம் தொடர்பான நிலைமை அறிக்கையின் படி நியூசீலாந்து டொலர் கணக்கின் வங்கிக் கூற்றின் படி மீதியாக நியூசீலாந்து டொலர் 866 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் வங்கிக் கணக்கிணக்கக்கூற்றின் படியான மீதி 1,466 நியூசீலாந்து டொலராகக் காணப்பட்டது. மேலும் அக் கணக்கின் வங்கிக் கணக்கிணக்கக்கூற்றில் காசேட்டின் படியான மீதி 884 நியூசீலாந்து டொலராகக் காணப்பட்ட போதிலும் ஒதுக்கீட்டுக் கணக்கில் அம் மீதி 457 நியூசீலாந்து டொலராகக் காணப்பட்டது. இம் மீதி இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒதுக்கீட்டுக் கணக்கின் (IV) சீ குறிப்பில் வங்கிக் கணக்கிணக்கம் தொடர்பான நிலைமை அறிக்கையின் படி, அவுஸ்திரேலிய டொலர் கணக்கின் வங்கிக் கூற்றின் படியான மீதி 78,972 அவுஸ்திரேலிய டொலராகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் அம் மீதி 26,994 அவுஸ்திரேலிய டொலராகக் காணப்பட்டது. மேலும் இக் கணக்கில் காசேட்டின் படியான மீதி 19,063 அவுஸ்திரேலிய டொலராக இருந்த போதிலும் ஒதுக்கீட்டுக் கணக்கில் இது 49,994 அவுஸ்திரேலிய டொலராகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) தூதரகங்களில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களின் குறைபாடு.

(i) தூதரகங்களில் காசேட்டு மீதிக்கும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று மீதிக்கும் இடையே இணக்கமின்மை காணப்பட்டதுடன் இது பேர்லினில் 30,046 யூரோவாகவும் பங்கொக்கில் கணக்கிலக்கம் 070981 இற்குரித்தான 304,016 அமெரிக்க டொலர்களும், லண்டன் கணக்கு இல. 1701 இல் 2014 பெப்ரவரி 26 ஆம் திகதி 4,309 பவுண்களும், ஹெனோயில் 339 அமெரிக்க டொலர்களும், சென்னையில் 2014 பெப்ரவரி 26 ஆந் திகதியில் உள்ளவாறான இரு கணக்குகளுக்கு உரித்தாக 10,109 இந்திய ரூபாய்களும், வியானாவில் 2014 பெப்ரவரி 26 ஆம் திகதியில் உள்ளவாறு வங்கி பிணையாக சேகரிக்கப்பட்ட 26,825 யூரோக்களும், பிரேஸிலில் இரு வங்கிக் கணக்குகளுக்கு உரித்தாக 2,026 பிரேஸில் டொலர் ரியால்களும், 313 அமெரிக்க டொலர்களுமான மீதிகள் காணப்பட்டன.

(ii) பேர்லின் தூதரகத்தில் இனங்காணப்படாத வரவு 18,785 யூரோக்களும் வொசிங்டனில் 2014 பெப்ரவரி 26 ஆம் திகதி வரையில் 1,047 டொலர்கள் தேறாது காணப்பட்டதுடன் அன்றைய தினத்தில் பரிஸ் தூதரகத்தில் 15,453 பவுண்கள் தேறாது காணப்பட்டன.

(iii) பேர்லின் தூதரகத்தில் 21,292 யூரோவும், லண்டன் கணக்கு இல. 1701 இல் 4,328 பவுண்களும், பரிஸ் தூதரகத்தில் 49,374 பவுண்களும், ஹெனோய் தூதரகத்தில் 3,274 வியட்னாம் டொங் என்பன நேரடியாகச் செலவைக்காட்டியிருந்தன. மேலும் பரிஸ் தூதரகத்தில் 15,453 பவுண்களும், ஹெனோய் தூதரகத்தில் 7,209 வியட்னாம் டொங் என்பன நேரடியாக வரவு வைக்கப்பட்டிருந்தன.

(iv) லண்டன் தூதரகத்தில் கணக்கு இல. 1701 இற்கான வங்கிக் கணக்கின் காசேட்டின் படியான மீதி 750 பவுண்களான போதிலும் வங்கிக் கணக்கிணக்கத் தயாரிப்பின் போது இது 4,463 வங்கி

மேலதிகப் பற்றாகக் கொண்டு வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் இல. 6800 இற்கான வங்கிக் கணக்கின் காசேட்டின் படியான மீதி 4,520 பவுண்களான போதிலும் வங்கிக் கணக்கிணக்கத் தயாரிப்பின் போது இது 1,233 பவுண்களாகக் காணப்பட்டது.

**1.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல்வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானவையாகக் காணப்பட்டன. தெரிவுக் கணக்காய்வின் போது அவ்வாறு கண்டறியப்பட்ட சில கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

(அ) இத்தாலி, உரோம் தூதரகத்தில் கடமையாற்றுவதற்காக உத்தியோகத்தர்கள் சேர்க்கப்படுகையில் இத்தாலியில் நிலவும் ஊழியர் சட்டங்கள் மற்றும் சட்ட நடவடிக்கைகள் தொடர்பாக போதிய கவனம் செலுத்தப்பட்டிராததாலும் குறித்த காலப்பகுதியின் போது தீர்ப்புகளுக்கு எதிராக மேன்முறையீடுகள் மேற்கொள்ளப்பட்டிராமையாலும் இத்தாலி தூதரகத்திற்குச் சேர்க்கப்பட்ட 5 உத்தியோகத்தர்களின் கடமை முடிவுறுத்தப்படுவதற்காக 91,422 யூரோ (இல. ரூபா 15,541,740) தொகையான நட்டஈடு கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

(ஆ) தூதரகத்தில் கடமையாற்றி விலகிச்சென்ற சில உத்தியோகத்தர்களால் இத்தாலி, தூதரகத்திற்கு எதிராக தொழிற் பிணக்கு நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டின் காரணமாக இத்தாலி அதிகாரிகளால் தூதரகத்தின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கு இடைநிறுத்தப்பட்டிருந்தது. தூதரகத்தின் உத்தியோகத்தர்கள் இத்தாலியில் அமுலில் உள்ள ஊழிய சட்டம் தொடர்பான முறையான கவனத்தைச் செலுத்தாமை, தூதரகத்தால் இது தொடர்பான விளக்கங்கள் தொழிற் பிணக்கு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கு மூடப்படுவதற்கு அடிப்படைக் காரணமாகியிருந்ததுடன் இதனால் இலங்கையின் நற்பெயருக்குப் பங்கமேற்பட்டிருந்தது.

## 1.9 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்ற விதத்தில் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அத்தகைய சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறாகும்.

அரசாங்க கொள்வனவு வழிகாட்டி நடைமுறைக்கு மாறாக இருத்தல்

2012 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த கொள்வனவுத் திட்டத்தில் பின்வரும் நலிவுகள் கண்டறியப்பட்டன.

(அ) அமைச்சின் செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்படாது கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் கொள்வனவுத் திட்டமும் 06 மாதங்களுக்கு குறைவற்ற காலத்தில் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உயர்ஸ்தானிகராலயங்களில் கொள்வனவுகள் அமைச்சின் கொள்வனவுத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.10 நட்டங்கள் மற்றும் இழப்புகள்

வெளிநாட்டு தூதரகங்களுக்கு உரித்தான 5 – 10 ஆண்டு காலத்தில் நிலவிய 19 சம்பவங்களுக்குரிய ரூபா 23,003,084 தொகையான நட்டங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 மற்றும் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.11 முகாமைத்துவ நலிவுகள்

வெளிநாட்டு தூதரகங்களால் தூதுவர்/ உயர் ஸ்தானிகர்களின் உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ விடுதிகளுக்காக வாடகை அடிப்படையில் கட்டிடங்கள் பெறப்பட்டு இவை தொடர்பாக பாரிய வாடகைத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. ஜப்பான் தூதரகத்திற்கு 2007 முதல் 2012 ஆம் ஆண்டு வரை 56,883,300 ஜப்பான் யென் வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. உரிய உடன்படிக்கை சில சந்தர்ப்பங்களின் போது முறையான வகையில் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. நீண்ட காலத் திட்டத்தில்

வாடகை செலுத்துவதைக் குறைப்பதற்காக கட்டிடத்தைக் கொள்வனவு செய்வது தொடர்பாக அமைச்சு கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**1.12 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணியினர் (வெளிநாட்டு தூதரகங்கள் தவிர்ந்தவை)**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 92 | 75 | 17 | - |
| மூன்றாம் நிலை | 07 | 06 | 01 | - |
| இரண்டாம் நிலை | 330 | 244 | 86 | - |
| ஆரம்ப நிலை | 134 | 137 | - | 03 |
| ஏனையவை (அமைய/ தற்காலிகமான/ ஒப்பந்த அடிப்படை) | - | 22 | - | 22 |
| மொத்தம் | 563 | 484 | 104 | 25 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 14 வெளிநாட்டு தூதரகங்களின் அங்கீகரிக்கப்படாத 14 பதவிகளுக்காக பதவியணி ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் 16 தூதரகங்களின் மிகையான பதவியணி 32 ஆகக் காணப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் 104 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சேர்க்கப்பட்டிருந்த மிகையான பதவியணி தொடர்பாக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.